www.Padasalai.Net www.CBSEtips.in

No. of Printed Pages : 11 +2 404103 **7037**

பதிவு எண்
Register Number J U N 2 0 2 3

# PART - III

# விலங்கியல் / ZOOLOGY

( தமிழ் மற்றும் ஆங்கில வழி / Tamil & English Version )

கால அளவு : 3.00 மணி நேரம் ] [ மொத்த மதிப்பெண்கள் : 70

Time Allowed : 3.00 Hours ] [ Maximum Marks : 70

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறை கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

**Instructions :** (1) Check the question paper for fairness of printing. If there is any lack of fairness, inform the Hall Supervisor immediately.

(2) Use **Blue** or **Black** ink to write and underline and pencil to draw diagrams.

## பகுதி - I / PART - I

**குறிப்பு :** (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **15x1=15**

(ii) கொடுக்கப்பட்டுள்ள **நான்கு மாற்று** விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**Note :** (i) Answer **all** the questions.

(ii) Choose the most appropriate answer from the given **four** alternatives and write the option code and the corresponding answer.

[ திருப்புக / Turn over

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

1. எவ்வகை இனப்பெருக்கத்தில் வேறுபாடுகள் தோன்றும் ?

(அ) பாலிலி இனப்பெருக்கம் (ஆ) கன்னி இனப்பெருக்கம்

(இ) பாலினப் பெருக்கம் (ஈ) (அ) மற்றும் (ஆ) இரண்டும்

In which mode of reproduction variations are seen ?

(a) Asexual (b) Parthenogenesis

(c) Sexual (d) Both (a) and (b)

2. ஒரு கருத்தடை மாத்திரை அண்டசெல் வெளியீட்டை எவ்வாறு தடுக்கிறது ?

(அ) அண்ட நாளத்தில் அடைப்பு ஏற்படுத்துதல் மூலம்

(ஆ) FSH மற்றும் LH ஹார்மோன்கள் சுரத்தலை தடுப்பதன் மூலம்

(இ) FSH மற்றும் LH ஹார்மோன்கள் சுரத்தலை தூண்டுவதன் மூலம்

(ஈ) அண்ட செல் விடுபட்டவுடன் அதனை உடனடியாக அழித்துவிடுவதன் மூலம்

A contraceptive pill prevents ovulation by :

(a) Blocking fallopian tube

(b) Inhibiting release of FSH and LH

(c) Stimulating release of FSH and LH

(d) Causing immediate degeneration of released ovum

3. மனிதனின் ABO இரத்த வகைகளை கட்டுப்படுத்துவது :

(அ) பல்கூட்டு அல்லீல்கள் (ஆ) கொல்லி மரபணுக்கள்

(இ) பால் சார்ந்த மரபணுக்கள் (ஈ) Y-சார்ந்த மரபணுக்கள்

ABO blood group in man is controlled by :

(a) Multiple alleles (b) Lethal genes

(c) Sex linked genes (d) Y-linked genes

www.Padasalai.Net

www.Padasalai.Net www.CBSEtips.in



4. தூது RNA மூலக்கூறு எம்முறையில் உருவாக்கப்படுகிறது ?

(அ) இரட்டிப்பாதல் (ஆ) படியெடுத்தல்

(இ) நகலாக்கம் (ஈ) மொழிபெயர்த்தல்

A mRNA molecule is produced by :

(a) Replication (b) Transcription

(c) Duplication (d) Translation

5. சீம்பாலில் அதிகம் காணப்படுவது :

(அ) Ig E (ஆ) Ig A (இ) Ig D (ஈ) Ig M

Colostrum is rich in :

(a) Ig E (b) Ig A (c) Ig D (d) Ig M

6. ஊர்வன இனத்தின் பொற்காலம் :

(அ) மீசோசோயிக் பெருங்காலம்

(ஆ) சீனோசோயிக் பெருங்காலம்

(இ) பேலியோசோயிக் பெருங்காலம்

(ஈ) புரோட்டிரோசோயிக் பெருங்காலம்

The golden age of reptiles was :

(a) Mesozoic era

(b) Cenozoic era

(c) Paleozoic era

(d) Proterozoic era



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



7. மனிதனில் சேற்றுப்புண்ணை ஏற்படுத்துவது :

(அ) பாக்டீரியா (ஆ) பூஞ்சை

(இ) வைரஸ் (ஈ) புரோட்டோசோவா

The Athlete's foot disease in human is caused by :

(a) Bacteria (b) Fungi

(c) Virus (d) Protozoan

8. B செல்களை தூண்டுவது :

(அ) நிரப்புக் கூறுகள் (ஆ) எதிர்பொருள்

(இ) இன்டர்பெரான் (ஈ) எதிர்பொருள் தூண்டி

B cells are activated by :

(a) Complement (b) Antibody

(c) Interferon (d) Antigen

9. சைக்ளோஸ்போரின் - A என்ற நோய்த்தடுப்பாற்றல் ஒடுக்கு மருந்து, எதிலிருந்து உற்பத்தி செய்யப்படுகிறது ?

(அ) அஸ்பெர்ஜில்லஸ் நைஜர்

(ஆ) மனாஸ்கஸ் பர்பூரியஸ்

(இ) பெனிசிலியம் நொட்டேட்டம்

(ஈ) டிரைகோடெர்மா பாலிஸ்போரம்

Cyclosporin - A is an immunosuppressive drug produced from ________.

(a) Aspergillus niger

(b) Manascus purpureus

(c) Penicillium notatum

(d) Trichoderma polysporum

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**10.** முதன் முதலில் மருத்துவ மரபணு சிகிச்சை மூலம் நிவர்த்தி செய்யப்பட்ட நோய் :

(அ) AIDS (ஆ) புற்றுநோய்

(இ) நீர்மத் திசு அழற்சி (ஈ) SCID

The first clinical gene therapy was done for the treatment of :

(a) AIDS (b) Cancer

(c) Cystic fibrosis (d) SCID

**11.** வெப்ப நிலையில் ஏற்படும் மாறுபாடுகளைத் தாங்கி வாழும் விலங்குகள் __________ என அழைக்கப்படும்.

(அ) எக்டோதெர்ம்கள் (ஆ) மிகை வெப்ப வேறுபாட்டு உயிரிகள்

(இ) எண்டோதெர்ம்கள் (ஈ) ஸ்டீனோதெர்ம்கள்

Organisms which can survive a wide range of temperature are called :

(a) Ectotherms (b) Eurytherms

(c) Endotherms (d) Stenotherms

**12.** உயிரினங்களின் சிவப்பு பட்டியலை வெளியிட்டுள்ள நிறுவனம் :

(அ) WWF (ஆ) IUCN

(இ) ZSI (ஈ) UNEP

The organization which published the red list of species is :

(a) WWF (b) IUCN

(c) ZSI (d) UNEP

[ திருப்புக / Turn over

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



13. இயற்கையான வாழிடங்களினுள் உயிரிய பல்வகைத் தன்மை பாதுகாப்பு என்பது :

(அ) சூழல் உள்பாதுகாப்பு (ஆ) சூழல் வெளிபாதுகாப்பு

(இ) உடலுள் பாதுகாப்பு (ஈ) உடல் வெளி பாதுகாப்பு

Conservation of bio-diversity within their natural habitat is :

(a) Insitu conservation (b) Exsitu conservation

(c) In vivo conservation (d) In vitro conservation

14. கீழ்க்கண்டவற்றுள் எது ஹியூகோ டி விரிஸின் பங்களிப்பு ?

(அ) திடீர் மாற்றத் தேர்வுக் கோட்பாடு

(ஆ) இயற்கைத் தேர்வுக் கோட்பாடு

(இ) முயன்று பெற்ற பண்பு மரபுப் பண்பாதல் கோட்பாடு

(ஈ) வளர்கரு பிளாசக் கோட்பாடு

Which of the following was the contribution of Hugo de Vries ?

(a) Theory of Mutation

(b) Theory of Natural Selection

(c) Theory of inheritance of acquired characters

(d) Germplasm theory

15. கிளைன்ஃபெல்டர் சிண்ட்ரோம் குரோமோசோம் தொகுப்பு வரைபடம் எவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது ?

(அ) XYY (ஆ) XO (இ) XXX (ஈ) XXY

Klinefelters' Syndrome is characterised by a Karyotype of ________.

(a) XYY (b) XO (c) XXX (d) XXY

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## பகுதி - II / PART - II

குறிப்பு : எவையேனும் ஆறு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். வினா எண் 24 -க்கு கட்டாயமாக விடையளிக்கவும். 6x2=12

**Note :** Answer **any six** questions. Question No. **24** is **compulsory**.

**16.** கன்னி இனப்பெருக்கம் என்றால் என்ன ?

What is parthenogenesis ?

**17.** இனச்செல் உருவாக்கம் - வரையறுக்கவும்.

Define gametogenesis.

**18.** ஹோலாண்டிரிக் மரபணுக்கள் யாவை ?

What are holandric genes ?

**19.** மனித இனத்தின் பரிணாமத் தோற்றத்தின் நிலைகளை கீழ்நோக்கு வரிசையில் வரிசைப்படுத்துக.

ஆஸ்ட்ரலோ பித்திகஸ் → ஹோமோ எரக்டஸ் → ஹோமோ சேப்பியன்ஸ் → ராமபித்திகஸ் → ஹோமோ ஹாபிலிஸ்

Rearrange the descent in human evolution.

Australo pithecus → Homo erectus → Homo sapiens → Rama pithecus → Homo habilis.

**20.** காலா-அசார் என்றால் என்ன ?

What is Kala-azar ?

[ திருப்புக / Turn over

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



21. வீக்கத்தின்போது உற்பத்தி செய்யப்படும் வேதிய எச்சரிக்கை சமிக்ஞைகளை பட்டியலிடுக.

List out Chemical alarm signals produced during inflammation.

22. உயிர் எதிர்ப்பொருள் - வரையறுக்கவும்.

Define "antibiotic".

23. டி.என்.ஏ தடுப்பூசிகள் என்பன யாவை ?

What are DNA Vaccines ?

24. உரம் கலந்த நீர் வழிந்தோடி நீர்நிலையில் கலப்பதால் நீர் சூழ்நிலை மண்டலத்தில் ஏற்படும் விளைவுகள் யாவை ?

What effect can fertilizer runoff have on an aquatic ecosystem ?

## பகுதி - III / PART - III

குறிப்பு : **எவையேனும் ஆறு** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். வினா எண் **33-க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். **6x3=18**

**Note :** Answer **any six** questions. Question **No. 33** is **compulsory**.

25. முதிர்ந்த விந்துவின் படம் வரைந்து பாகங்களை குறிக்கவும்.

Draw a labelled sketch of a spermatozoan.

26. இடை பால் உயிரியை மிகை பெண்ணில் இருந்து வேறுபடுத்துக.

Differentiate inter-sexes from super-sexes.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



27. மனித மரபணு தொகுதித் திட்டத்தின் இலக்குகள் எவையேனும் மூன்றினைக் குறிப்பிடுக.

State any three goals of human genome project.

28. லாமார்க்கின் பெறப்பட்ட பண்புக் கோட்பாட்டினை தவறென நிரூபித்தவர் யார் ? எவ்வாறு நிரூபித்தார் ?

Who disproved Lamarck's theory of acquired characters ? How ?

29. மேல்பூச்சாக்கம் விழுங்கு செல்களில் ஏன் திறன் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது ?

Why is Opsonisation efficient in Phagocytosis ?

30. பால் எவ்வாறு தயிராக மாற்றப்படுகிறது ? தயிர் உருவாகும் முறையினை விளக்குக.

How is milk converted into curd ? Explain the process of curd formation.

31. மரபணு மாற்றப்பட்ட விலங்குகள் என்பன யாவை ? எடுத்துக்காட்டு தருக.

What are transgenic animals ? Give examples.

32. பிறப்பு வீதம் மற்றும் இறப்பு வீதம் - வேறுபடுத்துக.

Differentiate - natality and mortality.

33. நாம் வெப்ப மண்டலங்களிலிருந்து துருவங்கள் நோக்கி நகரும்பொழுது உயிரிய பல்வகைத் தன்மையின் பரவல் குறைகிறது. ஏன் ?

Why do we find decrease in bio-diversity distribution, if we move from the tropics towards the poles ?

[ திருப்புக / Turn over

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## பகுதி - IV / PART - IV

குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 5x5=25

**Note :** Answer **all** the questions.

**34.** (அ) மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துவதில் பல்வேறு தடுப்பு முறைகள் பற்றி விளக்குக.

**அல்லது**

(ஆ) Rh காரணியின் மரபுக் கட்டுப்பாட்டை பற்றி விளக்குக.

(a) Explain the various barrier methods to control human population.

**OR**

(b) Give an account of genetic control of Rh Factor.

**35.** (அ) நியூக்ளியோசோம் உருவாகும் முறையை விவரிக்கவும்.

**அல்லது**

(ஆ) தனிமைப்படுத்துதல் முறையை வரையறை செய்க. அதன் வகைகளை தகுந்த எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

(a) Explain the formation of nucleosome.

**OR**

(b) Define isolation mechanism and explain its types with suitable examples.

**36.** (அ) மனிதனில் பிளாஸ்மோடியத்தின் வாழ்க்கைச் சுழற்சியை விளக்குக.

**அல்லது**

(ஆ) இம்யுனோகுளோபுலின் அமைப்பை தகுந்த படத்துடன் விளக்குக.

(a) Explain the life cycle of Plasmodium in man.

**OR**

(b) Explain the structure of immunoglobulin with suitable diagram.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**37.** (அ) மரபியல்பு மாற்றப்பட்ட உயிரினங்களால் நேரிடக்கூடிய ஆபத்துக்கள் யாவை ?

அல்லது

(ஆ) இருவேறு சிற்றின விலங்குகளுக்கிடையேயான சார்புகளை அட்டவணைப்படுத்தி அதனை பகுப்பாய்வு செய்க.

(a) What are the possible risks of GMOs ?

**OR**

(b) Tabulate and analyse the two species population interaction.

**38.** (அ) உயிரியப் பல்வகைத் தன்மையின் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கு நாம் எவ்வாறு பங்களிக்க முடியும் ?

அல்லது

(ஆ) நாம் காற்று மாசுறுதலை எவ்வாறு கட்டுப்படுத்தலாம் ?

(a) How can we contribute to promote bio-diversity conservation ?

**OR**

(b) How can we control air pollution ?

- o O o -

www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com